# சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

முன்னிலை : திரு.M.பாலமுருகன், B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பொள்ளாச்சி

2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09–ம் நாள் செவ்வாய்கிழமை

**இடை மனு எண்.1/2021**
**–in–**
**அசல் வழக்கு எண்.17/2021**

K.கண்ணையன்

...மனுவாதி/வாதி

/இடையே/

C.லீலாவதி

...எதிர்மனுவாதி/பிரதிவாதி

இம்மனுவானது, கடந்த 20.10.2021 ஆம் தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது, மனுதாரருக்காக வழக்கறிஞர் திரு.எம்.தியாகராஜன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரருக்காக வழக்கறிஞர் திரு.ஆர்.வினுராஜ் அவர்கள் முன்னிலையாகியும், பின்னர், சாட்சியங்களையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உ த் த ர வு**

1) இம்மனு மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 38 விதி 5ன் கீழ் நீதிமன்றம் குறிப்பிடும் கால அவகாசத்திற்குள் வழக்குத் தொகைக்கு உரிய Security furnish செய்ய உத்தரவிட்டும், தவறும் பட்சத்தில் எதிர்மனுவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு இதுவாகும்.

2) மனு பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் :

மனுவாதியிடம் எதிர்மனுவாதி கடந்த 20.05.2018 அன்று ரூ.5,00,000/– கடனாக பெற்றுக் கொண்டு வழக்கு பிராமிசரி நோட் வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக கூறி எழுதிக் கொடுத்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்து எதிர்மனுவாதிக்கு பாத்தியப்பட்டதாகும். எதிர்மனுவாதிக்கு மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தை தவிர வேறு சொத்து இல்லை. எதிர்மனுவாதி மனுவாதியிடம் பெற்ற கடன்துகையை செலுத்தாமல் எத்தனிக்கவும், ஏமாற்றவும், காலம் கடத்தவும் எண்ணி நில விற்பனை முகவர்கள் மூலம் மனுச் சொத்தினை விற்பனை

செய்ய துரித முயற்சி செய்து வருவதாகவும், எதிர்மனுவாதி அச்சொத்தினை வில்லங்க பாராதீனம் செய்துவிட்டால், மனுவாதி எதிர்மனுவாதியிடமிருந்து கடன் துகையை வசூல் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு விடும் என்பதால் Security furnish செய்ய கோரியுள்ளார். அவ்வாறு Security furnish செய்ய தவறும்பட்சம் தீர்ப்புக்கு முன் மனுச் சொத்தினை ஜப்தி செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டது என்பதாகும்.

3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனுஉரையின் சுருக்கம் :</u>

இம்மனு பொய்யானது, சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கக்கூடியதல்ல. மனுபிரமாணப் பத்திரிக்கையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் கற்பனையானது. பிரச்சினைக்குரிய புரோ நோட்டு பொய்யானது. அதனடிப்படையில் எதிர்மனுதாரர் தொகை ஏதும் பெறவில்லை. கடந்த 20.05.2018ம் தேதியன்று எந்த தொகையும் மனுவாதியிடம் இருந்து பெறவில்லை, மேலும் எவ்விதமான கடனும் பெறவில்லை. கடனுறுதி சீட்டும் எழுதிக் கொடுக்கவில்லை. வழக்கு பிராமிசரி நோட்டிலுள்ள கையெழுத்து போலியானது. வழக்கு சொத்து மடத்துகுளம் தாலூக்காவில் அமைந்துள்ளது. அதனை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரரே நகல் மனு எடுத்து, இம்மனுவினையும், பொய் வழக்கினையும் தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் எவ்விதமான வரவு செலவும் இல்லை என்பதால் இம்மனுவினை அதிகபடியான செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதாகும்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இம்மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5) இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய சங்கதி என்னவென்று பார்வை இடுகையில்,

மனுதாரர் கோரியபடி இம்மனுவை அனுமதிக்க வேண்டுமா, தீர்ப்புக்கு முன்பு மனுச் சொத்தினை ஜப்தி செய்ய உத்தரவிட வேண்டுமா? என்பதேயாகும்.

6) இம்மனு விசாரணையின் போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றார்ந்த வழக்கறிஞர் அவர் தரப்பு வாதத்தில், நீதிமன்றம் போதுமான அளவிற்கு கால அவகாசம் வழங்கிய பின்னர் கூட எதிர்மனுவாதியால் வழக்கு தொகைக்கு Security எதுவும் வழங்கவில்லை. தனது எதிர்வாதத்தில் Security வழங்க வேண்டிய அவசிமில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதியினை வலியுறுத்தி வாதத்தை முன் வைத்தார். இம்மனுவினை அனுமதிக்கு வேண்டும் எனவும் வாதுரைத்தார். எதிர்மனுவாதி தரப்பில் ஆஜரான கற்றார்ந்த வழக்கறிஞர் அவர் தரப்பு வாதத்தில், கடன் தொகை ஏதும் பெறாத நிலையில், கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுக்காத நிலையில் இம்மனு தேவையற்றது. எனவே அதிகப்படியான செலவுத்தொகையுடன்

மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

இம்மனுவில் கண்ட பிரச்சினை தீர்மானிப்பதற்கு முன்பாக, இந்நீதிமன்றம் உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 38 விதி 5 னை மீண்டும் ஒருமுறை நினைவு கூர்கிறது.

ORDER 38 RULE 5 OF C.P.C

Where defendant may be called upon to furnish security for production of property.-

*1) Where, at any stage of a suit, the Court is satisfied, by affidavit or otherwise that the defendant, with intent to obstruct or delay the execution of any decree that may be passed against him,-*

*a) is about to dispose of the whole or any part of his property, or*

*b) is about to remove the whole or any part of his property from the local limits of the jurisdiction of the Court,the Court may direct the defendant, within a time to be fixed by it, either to furnish security, in such sum as may be specified in the order, to produce and place at the disposal of the Court, when required, the said property or the value of the same, or such portion thereof as may be sufficient to satisfy the decree, or to appear and show cause why he should not furnish security.*

*2) The plaintiff shall, unless the court otherwise directs, specify the property required to be attached and the estimated value thereof.*

*3) The Court may also in the order direct the conditional attachment of the whole or any portion of the property so specified,*

*4) If an order of attachment is made withour complying with the provisions of sub-rule (1) of this rule, such attachment shall be void.*

மேற்படி சட்டப்பிரிவின் அடிப்படையில் பார்க்கின்ற போது வழக்கின் எந்தநிலையில் வேண்டுமானாலும், உரிய காரணங்களை தெரிவித்து, தீர்ப்பு பெற உரிய வாய்ப்பு உள்ளது என்பதை எடுத்துரைக்கும் பட்சத்தில், நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும்பட்சத்தில், தீர்ப்புக்கு முன்பு ஜப்தி செய்ய உத்தரவிடலாம் என அறிய முடிகிறது. இருந்தபோதிலும், எதிர்மனுவாதி தரப்பில் கடன் பெற்றவர், கடன் கொடுத்தவர் என்ற உறவுமுறையே இல்லை என்பதால் இம்மனு ஏற்புடைத்தது அல்ல என எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பிரச்சினைக்குரிய பிராமிசரி ஆவணம் உண்மையாதா அல்லது போர்ஜரியானதா, மறுபயன் கொண்டதா, இல்லையா போன்ற கேள்விகளுக்கு அசல் வழக்கில் இருதரப்பு சாட்சியங்களை விசாரித்து ஆவணங்களை பரிசீலத்து அதன் பின்னரே தீர்மானிக்க வேண்டும் என்பது தீர்மானிக்கப்பட்ட ஒரு சட்ட நிலைப்பாடு ஆகும். அதேபோல், இம்மனுவில் கண்ட சொத்துக்களை பொருத்து எதிர்மனுவாதிக்கு பாத்தியப்பட்டது அல்ல என எவ்விதமான மறுப்பும்

தெரிவிக்கப்படவில்லை. ஆகவே, மேற்படி சொத்து எதிர்மனுவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதைப் பொருத்து பூசல் ஏதுமில்லை. இவ்வழக்கு கடந்த 20.01.2021 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அன்றிலிருந்து இன்று வரை ஆட்சேபணையின் அடிப்படையில் கூட எதிர்மனுவாதி தரப்பில் வழக்கு தொகைக்கு Security ஏதும் கொடுக்கவில்லை. இந்நீதிமன்றத்தில் கடந்த 27.09.2021ம் தேதியன்று 15 நாட்கள் காலக்கெடுவிற்குள் Security கொடுக்க உத்தரவாகி உள்ளது. இவ்வாறான சூழ்நிலையில், நாளது வரையில் எதிர்மனுவாதி எந்தவிதமான Security யும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. ஆகவே, தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்வதற்கு முன்பாக எதிர்மனுவாதிக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கும் வண்ணம் Security கொடுக்க உத்தரவு பிறப்பித்து தவறும் படசத்தில் தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய உத்தரவிடலாம் என் இம்மனு பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

7) இறுதியாக,

1) வருகிற 29.11.2021ம் தேதிக்குள் வழக்கு தொகைக்கு எதிர்மனுவாதி Security கொடுக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. தவறும்பட்சத்தில் முன் தீர்ப்பு ஜப்தி உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

2) இம்மனு செலவுகளை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021–ம் வருடம் நவம்பர் மாதம் 09 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

Sd./ (M.Balamurugan)
சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

Sd./ (M.Balamurugan)
சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி